1981 ஆகஸ்டு 28]

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பிரிவுகள் 2 முதல 4 வரை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்றன.

பிரிவு 1 முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்றன.

மாண்புமிகு திரு. எஸ்.டி சோமசுந்தரம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு வேளாண் தொழிலாளர் நியாய ஊதியங்கள் (இரண்டாம் திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 72/1981) நிறைவேற்றப் பெறவேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, சட்ட முன்வடிவு நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 29-8-1981 காலை 9 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 7.23 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

## 7. பேரவை முன் வைக்கப் பெற்ற ஏடுகள்

### அ. சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்

94. தமிழ்நாடு குடிநீர் வழங்கு வடிகால் வாரிய (தகுதிகள், பதவிக்காலம், பயணப்படி வழங்கல், பணியின் ஏணைய வரம்பு நிபந்தனைகள்) விதிகளின் 7-வது விதியில் சில திருத்தங்கள் செய்வது குறித்து, ஊர்வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 6-1 1981 ஆம் தேதியிடப் பெற்ற 631 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு "தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு குடிநீர் வழங்கு வடிகால் வாரியச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 4/1971) 72 (4) பிரிவின் கீழ் பேரவையின் முன் வைக்கப்பெற்றது.

95. தமிழ்நாடு 1970 ஆம் ஆண்டு நகராட்சிப் பொதுப் பணி விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து, ஊர் வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 25-4-1981 ஆம் தேதியிடப் பெற்ற 742 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு "தமிழ்நாடு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 5/1920) 304 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது."

96. 1981 ஆண்டு மதுரை மாநகராட்சிப் பணி விதிகளுக்குச் சில விதிகள் செய்வது குறித்து ஊர்வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 2-5-1981 ஆம் தேதியிட்ப் பெற்ற 788 ஆம் எண் ஆரசாணையில் வெளியான அறிவிப்பு (1971 ஆம் ஆண்டு மதுரை மாநகராட்சிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1981) 432 (2) பிரிவின்கீழ் பேரவையின் முன் வைக்கப்பெற்றது.

97. தமிழ்நாடு 1966 ஆம் ஆண்டு நிலச்சீர் திருத்த (உபரி நிலங்களுக்கு இழப்பீடு வழங்குதல்) விதிகளில் சில திருத்தங்கள் செய்வது குறித்து வருவாய்த் துறையின் 13-5-1981 ஆம் தேதியிடப் பெற்ற 1129 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு "தமிழ்நாடு 1961 ஆம் ஆண்டு நிலச்சீர்த்திருத்தங்கள் நில உச்சவரம்பு கட்டுதல் (சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் 58/1961 112 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது."

98. தமிழ்நாடு 1980-ஆம் ஆண்டு கிராமப் பணியாளர்ப் பணி விதிகள் செய்வது குறித்து வருவாய்த் துறையின் 21-1-1981-ஆம் தேதியிடப்பெற்ற 141-ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு (இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 309-வது பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது).

ஆ. அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்

21. தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு வேளாண் தொழிலாளர் நியாய ஊதிய திருத்தச் சட்டமுன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டப் பேரவை சட்டமுன் வடிவு எண். 60/1981),

22. தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு வேளாண்மை வருமான வரி திருத்தச் சட்டமுன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண். 61/1981).

23, தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி இரண்டாவது திருத்தச் சட்டமுன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண். 62/1981).

24. தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு பொது விற்பனை வரி மூன்றாவது திருத்தச் சட்டமுன் வடிவின் நகலும் இணைப்பும் (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண். 63/1981).

25. தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் திருத்தச் சட்டமுன் வடிவின் நகலும் இணைப்பும் (சட்டப் பேரவை சட்டமுன்வடிவு எண். 64/1981).

26. தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு பயிர்களுக்குக் கேடு விளைவிக்கத்தக்க பூச்சிகளையும் நோய்களையும் பற்றிய திருத்தச் சட்டமுன்வடிவின் நகலும் இணைப்பும் (சட்டப் பேரவை சட்டமுன் வடிவு எண். 65/1981).